# DEPOSITION OF WITNESS

## In the Court of the Principal District Judge, Tiruchirappalli.

## Sessions Case No. 32 / 2025

Prosecution Witness No. PW.13

Chapter XXIII Code of Criminal Procedure

| Name / பெயர் | : | Dr. துளசி | Caste / இனம் | : | |
|---|---|---|---|---|---|
| Father's/ Husband's Name தகப்பனார்/ கணவர் பெயர் | : | | Calling / வேலை | : | |
| Village / கிராமம் | : | | Religion / மதம் | : | |
| Taluk / வட்டம் | : | | Age / வயது | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of 24.03.2026.
(A4 A7 A8 absent petition filed and allowed. Others present.)

(சாட்சி காணொளி வாயிலாக முதன்மை மாவட்ட நீதிமன்றம், சேலம் நீதிமன்ற ஒருங்கிணைப்பாளர் Mrs.Yasomathy, Translator, Mahila Court, முன்னிலையில் ஆஜராகி நீதிமன்ற நடவடிக்கையில் கலந்துகொண்டு சாட்சியம் அளித்தார்)

**முதல் விசாரணை** :

நான் சேலம் மாவட்டம், ஓமலூரில் துளசி மருத்துவமனை என்ற மருத்துவமனையை நடத்தி வருகிறேன். நான் மேற்படி மருத்துவமனையில் மருத்துவராகவும் பணியாற்றி வருகிறேன். 20.10.2023 ம் தேதி எங்கள் துளசி மருத்துவமனையில் நான் பணியில் இருந்தேன். காலை 11.40 மணியளவில் 23 வயதுடைய ரியாஷ் என்பவரை

அவருடைய நண்பர்கள் மூன்று பேர் மருத்துவமனைக்கு ஸ்டச்சரில் கொண்டு வந்தார்கள். அவர்களை விசாரித்தபோது திருச்சியிலிருந்து நண்பர்கள் அனைவரும் மேற்சொன்ன ரியாஷுடன் மேச்சேரியில் ஒரு திருமணத்திற்காக வந்ததாகவும், சாப்பிட்டுவிட்டு நின்று பேசிக் கொண்டிருந்தபோது ரியாஷ் மயங்கி கீழே விழுந்துவிட்டதாகவும், அவருக்கு பேச்சு மூச்சு இல்லை என்றும், உடனடியாக எங்கள் மருத்துவமனைக்கு அழைத்து வந்ததாக சொன்னார்கள். அவருக்கு இதய துடிப்பு, கண் விழி நிலைத்தும், மூச்சு எதுவும் இல்லை. அவருக்கு CPR சிகிச்சை அளிக்கப்பட்டது, 4 நிமிடங்கள் கழித்து அவருக்கு இதய துடிப்பு வந்துவிட்டது. அவருக்கு தேவையான அவசர சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டது. தீவிர அவசர சிகிச்சையானது 24 மணி நேரம் மேற்கொள்ளப்பட்டது. அவருக்கு கண் விழி வெளிச்சத்திற்கு மட்டும் அசைவு இருந்தது, வேறு எந்த மாற்றமும் இல்லை. மறுநாள்தான் ரியாஷ் பெற்றோர்கள் வந்தார்கள் அவர்கள் இங்கு வைத்து சிகிச்சை அளிக்க தங்களால் இயலாது என்றும், அதனால் அவரை விடுவித்து சேலம் அரசு மருத்துவமனைக்கோ அல்லது திருச்சி அரசு மருத்துவமனைக்கோ அழைத்து செல்வதாக சொன்னார்கள். நோயாளியை வென்டிலேட்டர் உதவியுடன் ஆம்புலன்சில் வைத்து அனுப்பி வைத்தோம். நோயாளியை சிகிச்சைக்கு அனுமதிக்கும்போது திடீர் உடல்நலக்குறைவு ஏற்பட்டு மருத்துவமனைக்கு அழைத்து வந்ததன் காரணத்தினால் விபத்து பதிவேடு எதுவும் பதிவு செய்யவில்லை. நாங்கள் எங்கள் மருத்துவமனையில் கொடுத்த சிகிச்சையின் விவரத்தை டிஸ்சார்ஜ் சம்மரியாக நோயாளியின் பெற்றோரிடம் கொடுத்தோம். என்னிடம் காட்டப்படும் ஆவணம்தான்

டிஸ்சார்ஜ் சம்மரியின் நகல் ஆகும். அது **அ.சா.ஆ.17**., ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :**</u>

நோயாளியின் வழக்கின் வரலாற்றின் அடிப்படையில் அவருக்கு விபத்து பதிவேடு பதியவில்லை. நோயாளி மருத்துவமனையிலிருந்து விடுவித்து சென்றது, எங்களுடைய அறிவுரையின்படி இல்லை என்றாலும், நோயாளியின் பெற்றோர் விருப்பப்படி என்றால் சரிதான். மருத்துவமனையில் சிகிச்சையின்போது நோயாளிக்கு எடுத்த ECHO Test முடிவுகளை ஆய்வாளர் எங்களிடமிருந்து பெற்றுக் கொள்ளவில்லை என்றால் சரிதான். ஆனால் அதுகுறித்து டிஸ்சார்ஜ் சம்மரியில் சொல்லியுள்ளோம். அந்த Echo பரிசோதனை முடிவின்படி ரியாசுக்கு இருந்த நோய், Mild Global Hypokinesia ஆகும் என்றால் சரிதான். அதன்படி இருதயம் மெதுவாக சுருங்கி, விரியும் தன்மையுடையதாக இருக்கும். அந்த நிலையில் உள்ள ஒரு நோயாளியை மருத்துவ பாதுகாப்பில் இருந்து விடுவிப்பது சரியாக இருக்காது என்றால் சரிதான். டிஸ்சார்ஜ் சம்மரி நோயாளியை மருத்துவமனையிலிருந்து அனுப்பும்போது கையில் கொடுத்துவிடுவோம். நோயாளியின் முன் நோய் வரலாறு சம்பந்தமாக அவர்களின் நண்பர்கள் எதுவும் சொல்லவில்லை, பெற்றோர்களும் சொல்லவில்லை. நான் விபத்து பதிவேடு பதிந்ததாக ஆய்வாளரிடம் சொல்லவில்லை என்றால் சரிதான்.

<u>**மறுவிசாரணை**</u> : இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

CHRISTOPHER M

Digitally signed by CHRISTOPHER M
Date: 2026.03.24 06:34:11 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.